[1994 மார்ச் 22

நிர்வாகத்துக்குக்கூட இல்லாத நிலையில், நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம் அதை நெடுஞ்சாலைத் துறையிலே அந்த சாலையை எடுத்துக்கொண்டு, அந்தப் பாலத்தைத் தரைமட்டப் பாலமாக, நிலமட்டப் பாலமாக 5 இலட்சம், 10 இலட்சம் ரூபாய் என்ற அளவிலே சிறு பாலத்தைக் கட்டி அங்கே போக்குவரத்து வசதி செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அதிலே 2 வெண்டட்காஸ்வே ஓடு பாலங்கள் இருக்கின்றன. அதை தரைமட்டப் பாலமாக மாற்ற வேண்டும் என்றாலும் மதிப்பீடு அதிகமாகும். ஏற்கெனவே அவரே தெரிவித்து இருக்கிறார், ஊராட்சி ஒன்றியச் சாலைகள் என்று. ஆகவே, இருக்கின்ற நிதி ஆதாரங்களைப் பொருத்துத்தான் அதைப் பரிசீலனை செய்ய முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினா எண் 67, திரு. எம்.பி. சேகர், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

67—

கூவம், பக்கிங்ஹாம் கால்வாயை சீர்படுத்தும் திட்டம்

***14379-டாக்டர் எம்.பி. சேகர் :**

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) கூவத்தை, பக்கிங்ஹாம் கால்வாயை சீர்படுத்தும் திட்டத்தை மறுபடியும் அரசு பரிசீலனை செய்யுமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: ஸமாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) சென்னை மாநகரில், நீர் வழிப்பாதைகளான கூவம், பக்கிங்ஹாம் கால்வாய் ஆகியவற்றைச் சுற்றுப்புற சூழ்நிலையின் அடிப்படையில் சீரமைக்கத் தேவையான திட்ட மதிப்பீட்டினைத் தயாரிக்கும் பணியை ஸெவர்ன் ட்ரெண்ட் என்ற யு.கே. (United Kingdom) இண்டர்நேஷனல் நிறுவனத்திடம் அரசு ஒப்படைத்து உள்ளது. இந்த நிறுவனத்தின் இறுதி அறிக்கையும் பரிந்துரைகளும் எதிர்பார்க்கப்படுகின்றன. மேலும், சென்னைப் பெருநகர் அபிவிருத்திக் குழுமம், அதாவது எம்.எம்.டி.ஏ. சென்னை பெருநகர் 'வெள்ள நிவாரணம்' என்ற ஒரு திட்டத்தின் கீழ் ஒரு திட்ட அறிக்கை தயார்க்கும் பணியை திருவாளர்கள் மெக்டொனால்டு

1994 மார்ச் 22]

என்ற யு.கே. நிறுவனத்திடம் ஒப்படைத்து இருக்கிறார்கள். ஆகவே, இரண்டு அறிக்கைகளும் வந்ததற்குப் பின்னாலே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி தமிழக முதல்வர் அவர்களுடைய ஆலோசனையின் பேரிலே இதை எப்படி வெளிநாட்டு உதவியுடன் செயல்படுத்தலாம், எந்த நிதி ஆதாரத்தின் அடிப்படையிலே செயல் படுத்தலாம் என்பதை அரசு பரிசீலித்து முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10.30

டாக்டர் எம்.பி. சேகர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லோரும் முடியாது என்ற முடிவெடுத்து, பல கோடி ரூபாய் செலவாகும் என்று பயந்து ஒதுக்கிய இந்த பெரிய திட்டத்தை, இந்த பக்கிங்ஹாம் கூவம் கால்வாயை சீர்படுத்தும் திட்டத்தை, நமது அரசில் மின்துறையில் மறுமலர்ச்சிகளை செய்து பல புதிய திட்டங்களைத் தீட்டி மின்சாரத்தை அண்டை மாநிலங்களிலிருந்து கடன் வாங்குகிற அவலநிலையை போக்கி, தமிழ் நாடு தன்னிறைவு பெறவேண்டும் என்று கருதி, அதன்மூலம் உபரி மாநிலமாக்கி மின்சாரத்தை அண்டை மாநிலங்களுக்கு கடன் கொடுத்து, தமிழ் நாட்டை தலைநிமிரச் செய்த பெருமைப்படச் செய்த, நமது மாண்புமிகு முதல்வர், சூப்பர் சி.எம்., (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய most super C.M., most efficient and most honourable C.M. of Tamil Nadu, டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுக்கும், மற்றும் திறமைமிக்க மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்களுக்கும், தமிழக மக்கள் சார்பாக முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடல்லாமல்...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியை நேரடியாகக் கேளுங்கள்.

டாக்டர் எம். பி. சேகர்: கூவம், பக்கிங்ஹாம் கால்வாயை சீர்படுத்த எடுத்துக்கொண்டு, கூவம் மணக்கும் என்று வாயளவில் சொல்லிவிட்டு சென்ற அவர்களுக்கு எல்லாம் தண்ணீர் காண்பிக்கும் வகையில் நமது டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் இந்த சீரிய திட்டத்தை எடுத்துக் கொண்டதற்கு சென்னை நகர மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை வினவுகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் சம்பந்தமான மதிப்பீடுகளைத் தயாரிக்கிற பணிகளைத்தான் அந்த நிறுவனங்கள் செய்யுமாறு கேட்டிருக்கிறார்கள். அவர்கள் மதிப்பீடுகளைத் தயார் செய்து, எந்தெந்த அடிப்படையில் இந்தத் திட்டத்தை நிறைவேற்றலாம்

என்கிற விவரமான அறிக்கையை அரசுக்குத் தந்ததற்குப் பின்னால் அதற்கு நிதியாதாரத்தை எங்கேயிருந்து கொண்டு வரமுடியும் என்ற அடிப்படையை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களைக் கலந்தாலோசித்து, இப்படி வெளிநாட்டு உதவியோடு செயல்படுத்தலாமா என்பதையெல்லாம் ஆய்வுசெய்து, பின்னால் முடிவெடுக்கப்படும். அதற்கான அடிப்படை பணிகளுக்காக திட்ட மதிப்பீட்டைத் தயாரிக்கும் பணியில் அரசு ஈடுபட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. செ. து. வரதராஜன்.

திரு. செ. து. வரதராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செங்கல்பட்டு சட்டமன்றத் தொகுதியில் பி. கனால் என்ற கால்வாய் வந்து அது புதுப்பட்டினத்தில் கடலில் கலக்கிறது. பி. கனால் என்ற டிவிஷன் அங்கே நிறுவி அந்த பி. கனாலை பராமரித்துக் கொண்டு வருகிறார்கள். அந்த பி. கனாலை கடக்க வேண்டுமென்றால் முன்பு படகுகள் சென்று கொண்டிருந்த காரணத்தால் அதைக் கடக்க நடைபாதைகள் அமைக்கிற, பிரிட்ஜ் அமைக்கிற அனுமதி வழங்காமல் இருந்தது. இப்போது படகுகள் செல்லாத காரணத்தால் ஊராட்சி ஒன்றியத்தின் சார்பாக அந்த 'புட் பாத் பிரிட்ஜ்' அமைப்பதற்கு பி.கனால் டிவிஷன் அனுமதி வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே கேட்கப்பட்டிருக்கிற கேள்வி கூவம், பக்கிங்ஹாம் கால்வாயை சீரமைக்கிற பணியை அரசு பரிசீலனை செய்யுமா என்பதாகும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனிக்கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு.எஸ். ஜெயக்குமார்.

திரு. எஸ். ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு பேப்பரில் ஒரு செய்தியைப் படித்தோம். மெட்ரோ வாட்டர் சுத்திகரிப்பு நிலையம் மூலம் சுத்தம் செய்யப்பட்ட வாட்டரை அந்த கூவம் கனாலில் ஊற்றி அதை கிளின் செய்யலாம் என்ற அந்தச் செய்தியை மரியாதைக்குரிய மேனேஜிங் டைரக்டர் அவர்கள் கொடுத்து இருக்கிறார்கள். அந்தத் திட்டத்தை செயல்படுத்தி அதைக் கிளின் செய்ய அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இந்தக் கூவம், பக்கிங்ஹாம் கால்வாய்த் திட்டம் என்பது அரசால் முழுமையாகப் பரிசீலித்து நிறைவேற்றப்பட வேண்டிய திட்டம், எந்த அடிப்படையில் சுத்தம் செய்யலாம் என்பதற்கு நம்முடைய மெட்ரோ வாட்டர் எம்.டி. அவர்கள் சில தகவல்களைச்

1994 மார்ச் 22]

சொல்லியிருக்கலாம். வெளிநாட்டு நிறுவனங்கள் இதை எப்படி புதிய முறையில் சீர்படுத்த முடியும் என்பதை ஆராயும் நிலையில், எழில்மிகு சென்னை 2000 என்ற ஒரு திட்டத்தை நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் இந்தத் திட்டத்தை மிகப் பொலிவோடு நடத்த வேண்டும் என்பதுதான் இந்த அரசின் நோக்கம். ஆகவேதான், பல்வேறு முறைகளிலே ஆய்வு செய்து, எது சரியாகப் படுகிறது என்று ஆயுவு செய்ததற்குப் பின்னால், மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர், புரட்சித் தலைவி அவர்களுடைய ஆலோசனையைப் பெற்று, எந்த முறையிலே சீரமைக்கலாம் என்பதற்கு இறுதி வடிவம் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். முற்பகல் 10.35

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, இந்த கூவம், பக்கிங்ஹாம் கனால் எங்கு தொடங்கி, எங்கு முடிகிறது? ஏதாவது ஒரு இடத்தில் இந்த இரண்டும் கலக்கிறதா? இவைகளுக்கு எப்படி இந்தப் பெயர்கள் வந்தன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திட்ட சம்பந்தமான கேள்வியாக இருக்கின்ற காரணத்தாலே, அதனுடைய மதிப்பீடுகள், அதனுடைய விவரங்கள் பற்றிதான் குறிப்பு தந்திருக்கிறார்கள். கூவத்தின் சரித்திரத்தைப் பற்றி அறிய வேண்டுமானால், தனியாக இதற்கு ஒரு கேள்வி கேட்டால், அந்தச் சரித்திரம் முழுவதும் இந்த அவையில் வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 68, திரு.ஓ.எஸ். அமர்நாத், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பற வளர்ச்சித்துறை அமைச்சர்.

68 —

குடியிருப்பு வாடகைக் கட்டுப்பாடு வழக்குகளை விசாரிக்க மதுரையில் தனி நீதிமன்றம் அமைத்தல்

16584** **திரு. ஓ. எஸ். அமர்நாத்:

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை நகரில் குடியிருப்பு வாடகைக் கட்டுப்பாடு வழக்குகளை விசாரிக்க தனி நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இல்லை.